கோயம்புத்தூர்முதன்மைக்கல்விஅலுவலரின் செயல்முறைகள்
முன்னிலைதிரு. ர.பாலமுரளி.,எம்.ஏ.,பி.எட்.,
ந.க.எண். 6430/அ1/2023 நாள் 14 .10.2024
புரட்டாசி , திருவள்ளுவராண்டு 2055

பொருள் : கருணை அடிப்படையில் பணி நியமனம் – விழுப்புரம் மாவட்டம் அரகண்டநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஓவிய ஆசிரியர் செல்வி. என்.பிரேமா என்பவர் 20.01.2014ல் இறப்பு – வாரிசுதாரரான வளர்ப்பு மகள் திருமதி.சீ.ஜீவிதா என்பவருக்கு இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட ஆணை அனுப்புதல் – சார்பு.

பார்வை : 1. தமிழ்நாடு பள்ளி கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை – 06, ந.க.எண். 38236/ஜே/இ4/2023, நாள். 20.08.2024

******

பார்வையில் காண் கடிதத்தின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், புஜங்கனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியாற்றும் திருமதி.சீ.ஜீவிதா என்பாருக்கு 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றுகள், அசல் அரசாணை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேற்காண் பணிவரன்முறை சார்ந்த உரிய பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு**

1. பணிப்பதிவேடு 1 பவுண்ட்
2. பணிவரன்முறை அரசாணை
3. அசல் கல்விச் சான்றுகள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கோயம்புத்தூர் – 641 001

பெறுநர்
திருமதி.சீ.ஜீவிதா
புஜாங்கனூர்
அரசு மேல்நிலைப்பள்ளி (தலைமையாசிரியர் மூலமாக)

நகல்

1. பள்ளி கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) தகவலின்பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, புஜாங்கனூர்

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் செல்வி.N.பிரேமா என்பவரின் வாரிசுதாரரான அவரது வளர்ப்பு மகள் திருமதி.S.ஜிவிதா, இளநிலை உதவியாளராக பணி நியமனம் –பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித்[ப.க.3(1)] துறை**

**அரசாணை (ப) எண். 108**

**நாள் 07.06.2024**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**
**குரோதி வருடம், வைகாசி 25**
**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.38236/ஜே/இ4/2023, நாள் 18.01.2024.

********

**ஆணை:-**

விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர், அரசு மேல்நிலைப்பள்ளியில், ஓவிய ஆசிரியையாகப் பணிபுரிந்த செல்வி.N.பிரேமா என்பார், பணிக்காலத்தில் 20.01.2014 அன்று காலமானார் என்றும், அன்னாரின் வாரிசுதாரரான அவரது வளர்ப்பு மகள் திருமதி.S.ஜிவிதா என்பார் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 19.12.2016 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 30.10.1995 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியருக்கு வளர்ப்பு மகளைத் தவிர பிற வாரிசுதாரர்கள் எவரும் இல்லை என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், பணியில் இருக்கும்போது காலமான அரசுப்

பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திருமதி.S.ஜிவிதா என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக்கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும், எனவே, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு நன்கு ஆய்வு செய்து, விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் ஓவிய ஆசிரியையாகப் பணிபுரியும்போது பணிக்காலத்தில் காலமான செல்வி N.பிரேமா என்பவரின் வாரிசான அவரது வளர்ப்பு மகள் திருமதி.S.ஜிவிதா என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

**பெறுநர்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
முதன்மைக் கல்வி அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்.
தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்

முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 6430/அ1/2023 நாள் 10.24
அரசாணை சார்பு செய்யப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கோயம்புத்தூர்
10/10/24